

# எங்கள் வனத்தின் கனவு

https://drive.google.com/file/d/1OUcXJpT7KnikED2bxwXPKhuP3kjU_c38/view?usp=sharing

# உழைப்பு


தமிழாக்கம் : முனைவர் போ. மணிவண்ணன், தமிழ் துறை உதவிப்பேராசிரியர், அரசு கலைக்கல்லூரி, உதகை, நீலகிரி.

எழுத்து : நீலகிரி அழிவின் விளிம்பில் இருக்கும் பழங்குடியினர் கூட்டமைப்பு, சுர்முரி தொகுப்பு, அதிதி பின்டோ, நீரா சிங்.

படங்கள் : நீலகிரி அழிவின் விளிம்பில் இருக்கும் பழங்குடியினர் கூட்டமைப்பு, சில்லி, தனுஷ், மெகனா, மற்றும் தனா

அச்சு : வசுந்தரா

கூடுதல் பங்களிப்பு : புஷ்பாஞ்சலி & தீபன்

பிறமொழிகளில் மொழிபெயர்க தொடர்பு கொள்க : Sobha.sw@gmail.com

https://www.fra.org.in/

www.twitter.com/forestrightsact



அனைத்தும் காப்புரிமை பெற்றவை. இதிலுள்ள எந்தப்பகுதியையும் அனுமதியின்றி மீட்டுருவாக்கம் செய்யக்கூடாது. ஆசிரியரிடம் இருந்து எழுத்துப் பூர்வமான அனுமதியும் பெருவதோடு, கூட்டமைப்பின் விதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் உட்பட்டே நகல் எடுத்தல், ஒளிபரப்புதல் முதலானவைகளையும் மேற்கொள்ள வேண்டும். இந்தப் பொருண்மை தொடர்பான ஐயங்கள், மற்றும் கேள்விகள் இருப்பின் அவை ஆசிரியரின் கவனத்திற்க்கு கொண்டுசெல்லப்படும். இது ஒரு மக்கள் குழுமத்தின் பொதுமை பதிப்பு. இந்தப் புத்தகத்தில் உள்ள தகவல்களை வணிக நோக்கமில்லாமலும் கல்வித் தேவைக்காகவும் மீட்டுருவாக்கம் செய்து கொள்ளலாம். மீட்டுருவாக்கம் செய்யப்படும் நூல் மூலநூலின் உரிம அனுமதியைப்பெற்ற பிறகே வெளியிடப்பட வேண்டும். எப்போதெல்லாம் இதை பயன்படுத்துகிறீர்களோ அப்போதெல்லாம் எங்களிடம் 0(CC-BY-NC-SA) தெரியப்படுத்துங்கள்.




# ஆசிரியர் குறிப்பு

நாங்கள் பனியர், காட்டுநாயக்கர், பெட்டகுறும்பர், இருளர், கோத்தர், தோடர், அலுக்குறும்பர், ஜேனுகுறும்பர், மற்றும் முள்ளு குறும்பர் முதலான சமூகத்தவர்கள். இந்தப் புத்தகத்தை எங்கள் இனக்குழுக்களுக்கான முதன்மை ஆதார கருவியாக படைத்தளித்துள்ளோம். முன்னோர்கள் எங்களுக்குச் சொன்ன கதைகள் மற்றும் வனஉரிமை சட்டம் (2006) குறித்த புதிய தகவல்கள் ஆகியவற்றின் கூட்டுத்தொகுப்பு தான் இந்த புத்தகத்தில் கதை வடிவில் சொல்லப்பட்டிருக்கின்றன.

எங்கள் சமூகத்திற்கு அப்பால் உள்ள மற்ற சமூகத்தவர்களுக்கும் இந்த நூல் பயன்விளைக்கும் என்று நம்புகிறோம். 2006 ஆம் ஆண்டின் வனஉரிமை சட்டம் ஆதிவாசிகளுக்கு மட்டுமே உரித்தானதல்ல. அனைத்து வன வாழ்வர்களுக்கும் பொருந்தும். இந்த உலகத்தின், குறிப்பாக இந்தியாவின் இன்னும் குறிப்பாக தென்னிந்தியாவின் நீலகிரி மாவட்ட வனங்களை எல்லாம் கடந்தும் கலந்தும் வாழ்கிற வானவாசிகளின் கதைகளே இங்கு எடுத்தாளப்பட்டுள்ளன.

எங்கள் இனக்குழுக்களின் வாழ்வியலை எமது மக்களிடமே சொல்வதற்காக உருவாக்கப்பட்டதே இந்த புத்தகம் ஆகும். கருத்துக்கள், புகைப்படங்கள் மற்றும் ஓவியங்கள் ஆகியவற்றைப் பகிர்ந்துகொள்வதற்காக வாட்ஸ்ஆப் குழுவைத்தொடங்கினோம். இதில் சேகரித்த பகிர்வுகளின் அடிப்படையிலேயே இந்த நூல் உருவாக்கப்பட்டுள்ளது.


இந்த நூலை மொழிபெயர்த்து, மெய்ப்பு சரிபார்த்து, வடிவமைத்து, உதவிய அனைத்து நண்பர்களுக்கும் நன்றி கூறுகிறோம்.

இதை படிக்கும் வாசகர்களால் வனஉரிமை சட்டம் குறித்தான கூடுதல் தகவல்களை தெரிந்துகொள்ள முடியும். வனச்சட்டத்தை உறுதிப்படுத்தி அதற்கு முறையான அங்கீகாரம் பெற்றுத்தருவதற்கு உறுதுணையாக இந்நூல் அமையும் என்று நம்பபுகிறோம்.

**நீலகிரி அழிவின் விளிம்பில் இருக்கும் பழங்குடியினர் கூட்டமைப்பு, நீலகிரி.**


எங்களோட நிலத்தெ எப்படி பறிகொடுத்தோம்?
வன உரிமைச் சட்டம்னா என்ன?
நாங்க இதுக்கு முன்னாடி எப்படி இருந்தோம்?
எங்கிருந்து தொடங்கணும்?
எங்க நிலங்களெ திரும்ப மீட்கறது எப்படி?



அஜ்ஜி, அஜ்ஜி, இப்ப ஒரு அழகான கனவுபாத்தேன்.
பச்சைப்பசேல்னு புல்வெளி, பறக்கிற பறவைங்க, கொட்டுற அருவி, அது ஒரு அழகான காடு. வனகாப்பளர் ஒருத்தரும் அங்கெ  காணலெ.
பழம், விதை, மூலிகை மருந்து, காளான் இப்படி எல்லாத்தையும் சேமிச்சோம்.
ஓ அஜ்ஜி, நா பாத்ததெ நீ பாத்தியா?
ஓ மேதி, என்னோட அஜ்ஜியும், அஜ்ஜியோட அஜ்ஜியும், நம்ம முன்னோருங்க எல்லோரையும் நா பல தடவெ பாத்தேன்.

அந்தக்காலத்துலெ காடு எல்லோருக்கும் பொதுவா இருந்துச்சு. அது யாருடைய சொத்தா இருக்கலெ. காடு, மரங்களோட நாங்க கையோட கை கோர்த்து வேலெ செஞ்சோம்.

அந்தக்காலத்துலே செவ்வாழை ஒரு மூலம் கையளவு கிடைச்சது. ரசாயானமு உரமு போட்டு மண்ணையும் விளைச்சலையும் நஞ்சாக்கலெ.

வெளச்சலையும் வனத்தையும் பாதுகாத்தோம். சில காலம் மண்ணுக்கு ஓய்வு கொடுத்தோம்.

அஜ்ஜி, எல்லோருக்கும் போதுமான உணவு கெடச்சதா?

ஓ மேதி. ஆள்களுக்கும், பறவை, விலங்குகளுக்குமான உணவு தாராளமா இருந்தது. எங்களுக்குத்தேவையானதெ எடுத்துகிட்டு, மீதத்தெ மத்தவங்க கிட்டே கொடுத்துட்டோம்.





அஜ்ஜி, காடு, தண்ணி, நிலம் எல்லாமே இயற்கை கொடுத்த வரம்னு தெரிஞ்சிகிட்டேன். யாருக்காவது ஒடம்பு முடியாமெ போனப்ப எப்படி பாத்துகிட்டோம்?

ஓ மேதி, முன்னோர்களும் இந்தக் காடும் தான் நமக்கு எல்லாத்தையும் கத்துகொடுத்துச்சி. காய்ச்சல், காயம், இருமல் எல்லாத்துக்குமான மருந்தெ அந்தக் காடு வச்சிருந்தது. இது உன் கனவுலெ வந்த ஞாபகம் இருக்கா?





அஜ்ஜி, இந்த காடு நமக்கு என்ன கொடுத்துச்சு?


நாம பேசுற வார்த்தெ, பாடுற பாட்டு, இயங்கற சக்தி இது எல்லாத்தையும் கொடுத்துச்சு.’ இதைத்தான கலாச்சாரம்’ னு சொல்லுவாங்க நாம இதெ ‘ வனம்’ னு கூப்பிடறோம்.

ஆனா, அஜ்ஜி இப்ப நம்ம வாழ்கை ரொம்ப மாறிடுச்சி. ஏன்? எதனாலெ? எப்பத்திலிருந்து?....சொல்லேன்.

காட்டுலை நாம சுந்திரமாகவும், நிம்மதியாகவும் வாழ்ந்து வந்தோம் பிரிட்டிஷ்காரங்க அதெ கைப்பத்தி அவங்க கட்டுப்பாட்டுக்கு கொண்டு வந்தாங்க குடிசைகளையும் குத்தகைக்கு வாங்கினாங்க.

காட்டெ நாம தாயா பாத்தோம், ஆனா அவங்க வெறும் மரமாத்தான் பாத்தாங்க. காட்டை அவங்க பராமரிச்சது வெறும் காசுக்காகத்தான்.






வரைபடங்களெ எழுதி, சட்டத்தெ உருவாக்கி, வரிகளெ விதிச்சாங்க மேதி. நம்ம காடு அவங்க சொத்தா மாறிச்சு. 'வனத்துறையெ' உருவாக்கினாங்க. வனக்காவலர்களெ நியமிச்சாங்க. பழம், தேன், எரிக்கற மரம் இதெல்லாம் கிடைக்காமெ போச்சி.




நம்ம மரங்களெ வெட்டி அவங்க மரத்தெ நட்டாங்க. பூழுபூச்சிங்க அழுதுச்சு, தண்ணீர் கண்ணீர்விட்டுச்சு, அவைகளெபோலத்தான் நாமும் இருந்தோம்.

ஆமா மேதி, உன்னாலெ வலியெ உணரமுடியுதா?







அந்த வலி இன்னும் நம்ம உடம்புலையும் ஓடையிலையும் ஓடிகிட்டே இருக்கு.
அதே வலி நம்ம நிலத்திலெ இன்னும் கசியுது, நம்ம மரபணுவுல விடாமெ பரவுது.


ஆமா அஜ்ஜி, அதெ நாம போராடி பெறணும். தொடர் தாக்குதலுக்குப்பிறகும்  எல்லோராலையும் எப்படி மௌனமா இருக்க முடிஞ்சது?
ஓ மேதி, இலெ, ஆதிவாசிங்க போராட நூறும்,  அதுக்கு மேலே நிறைய பேரெயும்  திரட்டுனாங்க.




''தேயிலையும் காப்பியும் ஏன் பறிக்கதொடங்கினோம்? யாராலெ? நாமதானெ உணவெ உற்பத்தி பண்ணினோம்''
''பணப்பயிர் தோட்டங்களாலெ நாம இப்ப நிலமற்றவர்களா ஆயிட்டோம். உடல்மெலிந்தும் போயிட்டோம்.''
''அவங்ககிட்டெ பணமும் இருந்துச்சு பேராசையும் இருந்துச்சு. அது இருக்கவே கூடாது சுதந்திரம் கெடக்கிற வரைக்கும் நாம போராடியே ஆகணும்''

முன்னாடி நாம எதுக்காக போராடினோம்?
நம்ம கோரிக்கை நிலத்துக்கா? உரிமைக்கா?

ஆமா மேதி, தைரியத்தோட ஆயுதம் தூக்கி போராடினோம். கொஞ்ச நிலத்தைத் திரும்பவும் சொந்தமாக்கினோம். அதெ ‘திட்டமிடப்பட்ட பகுதி' ன்னு அறிவிச்சாங்க. அப்புறம் நம்ம இடத்துலெ அவங்க தங்கினாங்க.


அதெ பாதுகாக்கப்பட்ட வனப்பகுதின்னு அறிவிச்சாங்க. விவசாயிகளாக இருந்த நம்மளெ 'சட்டமற்றவர்கள்', 'குற்றவாளிகள்'ளா ஆனோம்.

நமது உரிமைகள் மறுக்கப்பட்டுச்சு. பரிதாப நிலைக்கு ஆளாக்கினாங்க சில நிறுவனங்க நம்மள பாதுகாக்க முன்வந்துச்சி.

நம்ம உலகம் மொத்தமாவே மாறிடுச்சி. பள்ளிக்கூடம், மருத்துவமனெ, அறக்கட்டளை இப்படி எல்லாத்துக்கும் நம்ம முன்னோர்களோட பெயர்களெ வச்சாங்க.









ஆமா மேதி, பிரிட்டிஷ்காரங்க போயிட்ட பின்னும் அவங்க உருவாக்கின முறை நமக்கு நிரந்தரமாயிடுச்சு. ஆதிவாசிகளுக்கான சுதந்திர போராட்டம் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தலெ. அதே வன சட்டம், அதே வனத்துறை, புதிய அரசு நமது வனங்களெ அவங்களுடையதா மாத்திச்சு.

ஆமா மேதி, கனவுலெ புலி பாத்திருக்கியா? இடையிலெ புலிகளோட எண்ணிக்கை ரொம்பவும் குறைஞ்சிருச்சு. பலகை, ரயில்சாலை, தொழில்சாலைகளுக்காக மரத்தை அழிச்சாங்க. இது எல்லாத்தையும் நிறுத்த என்ன நடவடிக்கை எடுத்தாங்க.

மக்களையும் வனவிலங்குகளையும் காயப்படுத்த தொடங்கினாங்க. எங்களெ வீட்டிலிருந்து தூக்கிவெளியிலெ எறிஞ்சாங்க.






வளர்ச்சிங்கற பேருலெ அணைகட்டு, சுரங்கம் இவைகளெ உருவாக்கி நிலத்தையும் கையகப்படுத்தினாங்க.
உங்களெ வெளியேத்துறதுக்கு எங்ககிட்டெ அரசோட ஆணை இருக்கு.
LAND ACQUIRED FOR DAM
அணைக்கு
கையகப்படுத்தப்பட்ட நிலம்
TATA
TATA:
LAND ACQUIRED FOR MINING
சுரங்கத்திற்காக
கையகப்படுத்தப்பட்ட நிலம்
TATA
ஆமா அஜ்ஜி, அந்த முடிவுகளெ யார் எடுத்தது?


நம்ம நிலங்களெ எப்ப பயன்படுத்த தொடங்கினோம்?
N.G.O.
SAVE THE ADIVASIS
எங்கே நமது உரிமைகளும் அரசியல் சக்தியும்?
பள்ளிகளிலும், மருத்துவ மனைகளிலும், வேலைவாய்ப்பிலும் நாம புறக்கணிக்கப்பட்டது ஏன்?
ஆமா மேதி, அரசியல்வாதிங்க நம்மளெ பாதுகாக்கத் தவறினாங்க. இந்தச் சமயத்துலெ அரசு சாராத அமைப்புங்க நம்மோட இணைஞ்சாங்க. ஆனா, நம்ம நம்பிக்கைக்கையையும் பாராட்டையும் அவங்களாலெ பெறமுடியலெ அதிகமான நிதியை அவங்க உருவாக்கினதாலெ அதிக நிலங்களெ இழந்தது நாமதான்.
ஆமா அஜ்ஜி, ஆதிவாசிகளுக்கு எப்ப சுதந்திரம் கெடைக்கும்?


ஆமா அஜ்ஜி, எவ்வளவு கொடூரம்!
நம்ம வரலாற்றெ நான் பள்ளிக்கூடத்துலெ
படிச்சதே இல்லெ.
நீ குழந்தையா இருந்தப்ப
இயற்கைகிட்டெ இருந்தும் அம்மா, அஜ்ஜி, மற்றும்
சொந்தகாரங்கிட்டெ எல்லாத்தையும் கத்துகிட்டே.
இப்ப காங்கிரீட் காட்டுக்குள்ளெ
அடைபட்டிருக்கோம் கணிதம், வரலாற்று
பாடங்க முடிவு பெறமலே இருக்கு
இந்தக்காயத்தை தள்ளி, எதிர்நீச்சல் போட்டு
இதய துடிப்பெ எப்படி தெரிஞ்சிக்கணும்.
அஜ்ஜி, வாத்தியாருங்க ஆதிவாசிகளோட
மொழியிலெ சொல்லிகொடுப்பதில்ல.
மாணவர்கள் கஸ்டப்பட்டு புரிஞ்சிக்கிறாங்க.




'மொழி' தான் இலை. நம்ம நம்பிக்கைதா அதனோட வேர். மரம், நீர், சூரியன், தேனீ, பறவை இவை எல்லாமே நமக்கு கடவுளும் வாத்தியார்களும். இவை எல்லாத்தையும் ஒண்ணா நம்ம பூமித் தாய்கிட்டெ பாக்கலாம்.
சாதி முறையிலெ நம்ம அடையாளத்தெ பாக்க முடியாது. இப்ப இருக்கிற பிராமண கோயில்கள் எல்லா நம்ம புனித ஸ்தலங்க மற்றும் இடங்கதான்.
ஆம் அஜ்ஜி, ஏன் நம்ம வீட்டுக்கு பக்கத்துலெ கணேசன், விஷ்ணு பார்வதி, சிவன் கோயில்கள் இருக்கு ?
நம்ம சடங்குகளுக்கும் அவங்க சடங்குகளுக்கும் வித்தியாசம் இல்லை, ஆனா ஞாபகம் இருக்கட்டும் மேதி, நம்ம நடைமுறை தான் உண்மையானவை. நமது புனித இடங்களையும் வனங்களையும் நாமதான் பாதுகாக்கணும். வனங்களெ நல்லா பாதுகாத்து இயற்கையோட இயற்கையா சேர்ந்து வாழணும்.

ஆமா அஜ்ஜி, இந்த சிக்கல்களெ சரிபண்றது எப்படி?
நாம குடியிருக்கிற இடத்திலிருந்து நமது
எல்லைகளெ எப்படி வரையறுக்கணும்?






நம்மள்ள சிலபேர் காட்டிலையும் கடலுக்கு பக்கத்திலையும் வசிக்கிறாங்க. மத்தவங்க நகரத்துலெ வசிக்கிறாங்க. இப்ப எங்க வசிக்கறோம்கறது பிரிச்சனை அல்ல, போராட்டம் மனசுக்குள்ளை ஆழமா கொதிச்சிட்டுருக்கு. நாம தனிச்சி போராடுறது பயனில்லெ. ஐஞ்சு விரல்களையும் ஒண்ணு சேக்கறது எப்படிங்கறதெ முதல்லெ தெரிஞ்சிக்கணும்.






2002 ஆம் வருசத்துலெ சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் வெளியேற்ற உத்தரவினாலெ ஆதிவாசிங்க நிலத்தெ இழந்தாங்க. அதனாலெ இவங்களோட எதிர்ப்பும் போராட்டமும் தொடர்ந்தது.

அரசாங்கத்தோட நடவடிக்கைக்கு ஆதிவாசிங்க அடிபணியலெ, அதற்கு பதிலா இன்னும் வலிமை ஆனாங்க. புதிய சட்டத்தெ அமுல்படுத்தும் வரைக்கும் சோர்வே இல்லாமெ போராடினாங்க.

அஜ்ஜி, அது என்ன சட்டம்?

ஆமா மேதி, இந்திய அரசியல் சாசன சட்டம். மக்கள் எல்லோரும் சமம் என்றுதான் அது சொல்லுது. சட்டம் சமத்துவத்தெ பாதுகாக்குது. மீறினால் தண்டிக்கவும் செய்யுது.

வன உரிமை சட்டம் வனத்தில் வாழ்பவரின், ஆதிவாசிகளின் வாழ்வாதாரத்தையும் வனபாதுகாப்பினையும் உறுதிசெய்கிறது.

நாம வேட்டையாடுறதும், பச்சை மரங்கள வெட்டி விக்குறது தவிர்க்கப்பட வேண்டியவை தான். மற்ற வனப் பொருட்களில் தான் நம் வாழ்வாதாரம் இருக்கு.

ஆமா அஜ்ஜி, புல்லு, மரம், மூலிகை, பூ, இஞ்சி, மீனு, தேனு, விறகு எல்லாத்தையும் கற்பனை பண்ணி பாரு! இந்தப் பொருளுங்க எல்லாம் மரப் பொருட்கள் இல்லெ.





## வன உரிமை சட்டம் (2006)

ஓ அஜ்ஜி, வன உரிமை சட்டம் 2006 வேலைன்னா என்ன? நமக்கானதெ நாம எப்படி கேட்டு வாங்கணும்?

கம்பளிப்பூச்சியோட வாழ்க்கையெ யோசி. வன உரிமை சட்டம் 2006 யோட செயல்பாடும் அதுபோலத்தா இருக்கு.

முட்டைகள்:
முதல்லெ கிராம சபை கூட்டணும்.
ஆண், பெண், வயசானவங்க இவங்க எல்லோரும் ஒண்ணு சேரணும். நமக்கான வீடு, நிலம், வேலைவாய்ப்பு எல்லாத்தையும் கேட்டுவாங்கணும். வனம்வாழ் சமூகத்தெ உருவாக்கணும். ஆதிவாசிங்களுக்கு மட்டுமில்லே 75 வருசத்திற்கு மேலும் காட்லெ வாழுற மக்களுக்கும் இந்த சட்டம் பொருந்தும்.



கூடு:
நம்ம கோரிக்கையெ அரசாங்கம் ஏத்துக்கிட்டு, அதை நிறைவேத்தி தரணும். கிராமசபையோட ஒப்புதல் இல்லாமெ திட்டத்துக்காக ஆதிவாசி நிலங்களெ கையகப்படுத்தக் கூடாது. அப்படி தொடங்கினால், அதெ வட்டாரக் குழுவும், மாவட்ட குழுவும் கண்காணிக்கணும்.


கம்பளிப்பூச்சி:
கிராம சபை மூலமா நம்ம உரிமையெ கேட்டுப் பெறணும். நம்ம வனச் செல்வங்களான அருவிங்க, மரம் சாரா வனப் பொருளுங்க, வனம் சார்ந்தவரைபடம் இப்படி எல்லாமே இதிலெ அடங்கும்.

பட்டாம்பூச்சி:
உங்க கோரிக்கை நிறைவேறும் போது நிலமும் காடும் உங்களுக்கு சொந்தமாயிடும். அதுக்கப்புறம் வனங்களெ நீங்களே பாதுகாத்து பயன்பாட்டுக்கும் கொண்டு வரலாம்.

ஆமா அஜ்ஜி, ஒவ்வொரு கிராமத்துக்கும் நிறைய கோரிக்கைகள் இருக்கு.

அதனாலெ எல்லோரும் ஒண்ணு சேந்தாத்தானே அதை முறைபடுத்த முடியும்?

ஆம் மேதி, இது ஒரு நீண்ட பயணமா இருக்கும் மூன்று அரசு அலுவலர்கள் இதுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்காங்க. உங்களோட ஒவ்வொரு கோரிக்கையையும் புகாரையும் அவங்க சரிசெஞ்சி தரணும்.






**எவ்வளவு நிலத்தெ கேக்கலாம்?**
காட்டுலெ வேலெ செய்யிற ஒவ்வொரு குடும்பமும் 4 ஹெக்டேர் (10 ஏக்கர்) பயிர் நிலத்தெ கேட்டு வாங்கலாம்.

**அந்த நிலத்தெ விக்க முடியுமா?**
அந்த நிலத்தெ விக்க முடியாது, தனிக்குடும்பகாரங்க அவங்க பிள்ளைகளுக்காக நிலத்தெ மாத்திக்கலாம்.

**என்னோட தோழி காட்டுலெ வசிக்கிறா. ஆனா ஆதிவாசி இல்லெ. அவளுக்கு நிலம் கிடைக்குமா? எப்படி?**
அவளும் நிலத்தெ கேட்டு வாங்கலாம். 3 தலைமுறையாவோ, இல்லெ 75 வருசத்துக்கு மேலையோ 2005 ஆம் ஆண்டுக்கு முன்னாடியோ அந்த வனத்துலெ அவங்க வசிச்சிருக்கணும்.

**எந்த அரசு துறை இதுலெ ஈடுபட்டிருக்கு?**
பழங்குடி வெளியுறவு துறைக்கு கீழெ **"வன உரிமை சட்டம் - 2006"** அமைச்சகம செயல்படுது. இது மாநிலத்துலெ பழங்குடி துறையா இருக்கு. வனத்துறையோட பிரதிநிதி அமைப்புகளான கோட்டம் அளவிலான குழு, மாவட்ட அளவிலான குழு, மற்றும் மாநில கண்காணிப்பு குழு, பழங்குடி நலவாரியம், வருவாய் அலுவலர்கள், தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளோடு இணைஞ்சி செயல்படுது.

**இந்த வேலையெ ஆண்கள் மட்டுமே செய்றாங்களா?**
இல்லெ. இந்த வேலைக்கு ஆண் பெண் வித்தியாசம் இல்லெ. ஆனா குழுக்கள்ளெ இடம்பெற்ற பெண்களோட சதவீதம் ரொம்ப கம்மி. ஆண் பெண் என்று தனித்தனியாகவோ, கணவன் மனைவின்னு கூட்டாகவோ பதிவு செஞ்சி கொடுக்கப்படுது.

**புலிகள் சரணாலயத்துக்கு பக்கத்துலை இருக்குற நிலத்தெ கேக்க முடியுமா?**
ஆமா, கேக்கலாம். ‘வனம்‘ என்பது வகைப்படுத்தாத வனம், பாதுகாக்கப்பட்ட வனம், முறைப்படுத்தின வனம், வருவாய் வனம், சரணாலயம், தேசிய பூங்காவனம், பூங்காவனம் மற்றும் புலிகள் காப்பகம் இவை எல்லாத்தையும் அடக்கியது தானே.


ஆமா மேதி, ஏ நீ கண்ணெ மூடி யோசனெ பண்றே?
இல்லெ அஜ்ஜி, நீ சொன்ன ஒவ்வொண்ணையும் நா கவனிச்சிட்டிருந்தே. கண்ணெ தெறந்த பின்னாடியும் அந்த கனவெ என்னாலெ பாக்க முடியுது. வயசானதாலெ அப்படி இருக்கலாம். நா இங்கெ கத்துக்கிட்டதெ எல்லார்கிட்டையும் சொல்லப் போறேன்.
ஆமா மேதி, நா பெருமைபடறேன். நீ பளபளன்னு அழகா தெரியுறே! உன்னோட தலைமுறை இந்த போராட்டத்தெ முன்னெடுக்கும்.



வன உரிமை சட்டங்களை தென்னிந்தியாவில்
நீலகிரி மலைப்பிரதேசத்தைச் சேர்ந்த
ஆதிவாசி பெண்ணான மேதியிடம்
கற்றுக்கொள்ளுங்கள்.